<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 121 /2017**

வா.சா. 1– முருகேசன்

<u>29–11–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவாச்சொத்து ஆதியில் மாரப்பச்செட்டியாருக்கு எந்தவருடத்து ஆவணத்தின்படி பாத்தியம் என்றால் 1949 ஆம் வருடம் ஆவணத்தின் படி பாத்தியம். அந்த ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்பது தெரியவில்லை. **வா.சா.ஆ.1** ஆவணத்தின் மூல ஆவணம் உள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அம்மாதிரி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.1** ஆவணத்தின் மூலப்பத்திரத்தை பார்த்தால் **வா.சா.ஆ.1** சொத்து விவரம் சரியானது என்று தெரியவரும் என்றால் சரிதான். **வா.சா.ஆ.1** ஆவணத்தின் மூல ஆவணம் என்னிடம் உள்ளது. தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

2) தாவாச்சொத்தின் கூட்டு பங்குதாரர்களிடம் அசல் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அதை ஒப்படைக்க முடியுமா என்றால் முடியாது. அசல் ஆவணம் யாரிடமும் இல்லை. 1949 ஆம் வருடத்தில் இருந்து தாவாச்சொத்திற்குரிய வில்லங்கச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1949 வருடத்திற்கு பிறகு சொத்துக்கள் யாருக்கு விற்கப்பட்டது என்பதை வில்லங்கச்சான்றிதழை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். 1949 முதல் இன்றைய தேதி வரை வில்லங்கச் சான்றிதழ் ஒப்படைக்க முடியும் என்றால் சரிதான். 1949 ஆம் வருடத்திற்கு பிறகு விற்பனை செய்த சொத்துக்களை போக மீதமுள்ள சொத்துத்தான் தாவாச்சொத்து என்றால் சரி. 1949 ஆம் ஆண்டிற்கு பிறகு எவ்வளவு சொத்துக்கள் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரத்தை தாவா வழக்குரை, முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) 1949 ற்கு பின்பு எனக்கு பிரிக்கப்பட்ட சொத்துக்கள் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. விற்பனை செய்யப்பட்ட சொத்து விவரங்கள் தாக்கல் செய்தால்தான் தாவாச்சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை முடிவு செய்ய முடியும் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பொறுத்து

விளம்புகை பரிகாரம் கோரப்படவில்லை அதனால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து என்னுடையது என்று கேட்டு போட்டுள்ளேன். அம்மாதிரி பரிகாரம் தாவாவில் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தானது 3 செண்ட் 30 லட்சம் போகுமா என்றால் போகும். அதனால் தாவாவை விசாரணைக்கு ஏற்க அதிகார வரம்பு இந்நீதிமன்றத்திற்கு இல்லை என்றால் எனக்குத் தெரியாது. தாவா தாக்கல் செய்யும் போது தாவாச்சொத்தின் சர்வே எண் தவறாக தெரிவித்துவிட்டேன் என்றால் சரியல்ல.

4) தாவாச்சொத்தின் சர்வே எண். 365. டவுன் சர்வே எண் என்ன என்றால் 751/11 ஆகும். டவுன் சர்வே எண் 751/11க்குரிய பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்திற்குரிய சிட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மாரப்பச் செட்டியார் இறந்த பிறகு அவருடைய சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட கிரைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் சொத்துக்கள் முழுவதும் விற்பனை செய்துவிட்டது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தப்பத்திரம் ரத்து செய்த போது முத்துசாமியிடமிருந்து ரூ. 3 லட்சம் திருப்பி செலுத்தியதற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரசீது முத்துசாமியிடம் உள்ளது. முத்துசாமி மூலம் இரசீதை ஒப்படைக்க முடியும் என்றால் சரிதான்.

5) தாவாச்சொத்துக்கள் ஆதியில் குமாரசாமியின் வாரிசுகளான சதாசிவம், கந்தசாமி, பழனிச்சாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது வேறு சொத்தாகும். பழனிச்சாமி தாவாவின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு 15.02.1990 ஆம் வருடம் ஏற்பட்ட அவர் குடும்பத்தினரிடையே சொத்துக்கள் பிரிக்கப்பட்டு தாவாச்சொத்து அதன் மூலம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டா படி பாத்தியம். 28.07.1938 ஆம் வருடம் பாகப்பிரிவினை படி தாவாச்சொத்து சி செட்டியூல் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன்படி 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரருக்கும் மேலே சொன்ன ஆவணங்களின் படி தாவாச்சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரியல்ல.

6) அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி தாவாச்சொத்தை விற்பனை செய்வதற்கு 01.04.2015 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த பத்திரத்தின்

அடிப்படையில் 2ம் பிரதிவாதி ஏற்றுதலை ஆற்றுதலை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அ.வ.எண். 393/2016 என்று முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. தாவாச்சொத்தை பொறுத்து அந்த வழக்கில் சமாதானம் ஏற்பட்டு 22.02.2017 ஆம் தேதி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் 06.03.2017 எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது.

7) அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தாவாச்சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. அதன் பேரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவாச்சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவாவில் 1, 2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவாச்சொத்தை பொறுத்து எதிருரை தாக்கல் செய்யப்பட்ட பிறகு விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று எழுவினா ஏற்படுத்திய பிறகும் தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் எனக்குத் தெரியாது. அ.வ.எண். 393/2016 ல் ஏற்பட்ட தீர்ப்பு செல்லாது என்று நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்ப்பு பற்றி தெரியாது.

8) அ.வ.எண். 393/2016 தாக்கல் செய்து தீர்ப்பாணை விவரம் எல்லாம் எனக்குத் தெரியும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 393/2016 தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தாது என்றும் அதை செல்லாது என்று பரிகாரம் கோரமல் தாவாவில் நான் கோரிய முதல் பரிகாரம் சட்டப்படி நிலைக்காது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தை பார்த்தேனா என்றால் இல்லை. **வா.சா.ஆ.1** ஆவணத்தின் சொத்து விவரம் செக்குபந்தி சொல்லமுடியுமா என்றால் 5 ஏக்கர் 54 செண்ட் ஆகும். கிழக்கு மேற்காக உள்ள சொத்துக்கள் நான் விற்பனை செய்த சொத்துக்கள். **வா.சா.ஆ.10 ல்** பணம் செலுத்தியதாக சொல்லிய சின்ன கந்தசாமி தாவாவில் தரப்பினர் இல்லை என்றால் சரி. அவரிடம் பணம் பெற்றேன்.

9) 1ம் பிரதிவாதி எந்தத் தேதியில் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்தார் என்று புகார் கொடுத்த தேதிகள் சொல்லமுடியுமா என்றால் முடியாது. **வா.சா.ஆ.5** அரசு நிலஅளவையர் முன்பு பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **வா.சா.ஆ.4 ல்** குமாரசாமி செட்டியார் பெயரில் உள்ளது என் பெயரோ மற்ற வாதிகள் பெயரோ இல்லை என்றால் சரி. வேறு சிட்டா என் பெயரில் உள்ளது.

தாவாச்சொத்து 2ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து அவருக்கு பாத்தியப்பட்டது என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் உண்மையான மதிப்பை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவா செல்லாது என்றால் சரியல்ல.

10) இந்த தாவாவை பொறுத்து அ.வ.எண். 150/1998 மற்றும் அ.வ.எண்.192/1996 நிலுவையில் உள்ள விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரி. அந்த விவரங்கள் எனக்குத் தெரியும் அதை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/– கே. ஆர். கண்ணன்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.